பக்கங்கள் நான்கு — விலை ரூபா: 5 - 00

# முரசொலி

முரசு 05 ஒலி 306 பிரசோற்பத்தி ஐப்பசி 29 (15 - 11 - 1991) வெள்ளி

★ அகதிகளுக்கு வழங்கப்படும் பாலிமா

## வெளிச்சந்தையில் செல்வதைத் தடுக்க கரைத்து வழங்க பரீட்சார்த்த முயற்சி

தீவகம், கடற்கரையோரப் பிரதேசங்களிலிருந்து இடம் பெயர்ந்து குடா நாட்டின் பல்வேறு முகாம்களிலும், தங்கியிருக்கும் இடம்பெயர்ந்தோருக்கு வழங்கப்படுகின்ற பாலி மா வகைகள் வெளிச் சந்தையில் விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது, அதன் காரணமாக இடம் பெயர்ந்தோர் முகாம்களில் தங்கியிருக்கின்ற குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார் போதிய சத்துண —04 ஆம் பக்கம் பார்க்க

ஒரு பக்கச் செய்தி வழங்கும் முயற்சி இனிப் பலிக்காது

## ஆசியப் பிராந்தியத்தில் தொலைக்காட்சி ஒளிபரப்பில் புரட்சிகர மாற்றம்

ஆசியப் பிராந்தியத்தில் இதுவரை காலமும் தரைமூலமான தொலைக்காட்சிச் சேவையை மாத்திரமே காணக் கூடிய வாய்ப்பினைப் பெற்றிருந்த மக்களுக்கு, இனிமேல் வானிலிருந்தும் தொலைக்காட்சி ஒளிபரப்பினைக் காணும் வாய்ப்பு ஏற்படப் போகின்றது. தொலைக்காட்சிச் சேவை செயற்கைக் கோள் மூலமாக ஆசிய மக்களுக்கு பி. பி. ஸி மூலம் அறிமுகமாகியுள்ளது, இது —04ஆம் பக்கம் பார்க்க

## ஆறு பல நோ. கூ. சங்கங்களில் இன்று முதல் சவர்க்காரம் விநியோகம்

ப. நோ கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் சவர்க்காரங்களும், சலவைப்பவுடர்களும் விற்பனை செய்யப் படவிருக்கின்றன. இதற்கான அனுமதி யாழ் செயலகத்தின் செயிட்டப் பணிப்பாளர் செ. பத்மநாதனால் ப. நோ. கூ. சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப இவை வழங்கப்படவிருப்பதாகவும், ஒரு சவர்க்காரத்தின் விலை 13ரூபா 50 சதமாகவும் விற்பனை செய்யப் படவிருப்பதாகவும் மேலும் தெரிய வருகின்றது. இவ்விநியோகத்தை மேற்கொள்வதற்காக நேற்று ஆறு ப. நோ. கூ. சங்கங்கள் சவர்க்காரங்களையும் சலவைப் பவுடர்களையும் எடுத்துச் சென்றிருப்பதாகவும், —04ஆம் பக்கம் பார்க்க

★ புனர்வாழ்வு அமைச்சின் செயலர் புதிய நிபந்தனை

# இந்தியாவிலிருந்து திரும்பும் அகதிகள் சத்தியக் கடதாசி சமர்ப்பிக்கப் படவேண்டும்!

இந்தியாவிலிருந்து திரும்ப விருப்பம் தெரிவித்துள்ள தமிழ் அகதிகள் ஸ்ரீலங்கா அரசுக்குச் சத்தியக் கடதாசி சமர்ப்பிக்க வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. இத்தகவலை நேற்று செய்தியாளர் மாநாட்டில் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் கிறிஸ்ரி டி சில்வா வெளியிட்டுள்ளார்;

தமிழகத்தில் தங்கியுள்ள இரண்டு இலட்சம் அகதிகளில் ஓர் இலட்சம் அகதிகள் இலங்கை திரும்ப விரும்புகின்றனர், எனக்குறிப்பிட்ட கிறிஸ்ரி டி சில்வா இலங்கை திரும்ப விரும்பும் அகதிகள் தாம் எவ்வித வற்புறுத்தலுமின்றித் தாமாகவே தாயகம் திரும்புகின்றோம் என கையெழுத்திட்ட சத்தியக் கடதாசியை ஸ்ரீலங்கா அரசுக்கு சமர்ப்பிக்கவேண்டும் என்றார்.

இவ்வாறு அகதிகள் உறுதிமொழி தந்தாலே ஐ. நா. அகதிகள் உயர் ஸ்தானிகராலயம் (யூ. என். எச். சி. ஆர்) மூலம் இலங்கைக்கு புனர்வாழ்வு நிதி இடைக்கும் —04 ஆம் பக்கம் பார்க்க

## பனைமரம் விழுந்து பசுமாடு இறந்தது

கன்று ஈனவிருந்த நல்ல இனப் பசுமாடு ஒன்றின்மேல் பனை மரம் முறிந்து விழுந்ததனால் அது ஸ்தலத்திலேயே துடிதுடித்து மரணமானது.

நேற்று முன்தினம் அராலி கோட்டைக்காடு என்னும் கிராமத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. 18

## கடும் மழைகாரணமாக வன்னிப்பகுதி அகதிகள் அவலம்

கடந்த சில நாள்களாகப் பெய்யும் அடை மழையினால் கிளிநொச்சி, முல்லைத் தீவு பகுதிகளில் உள்ள அகதிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தங்கியுள்ள முகாம்களுக்குள் மழை நீர் உட்புகுந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் உணவு தயாரிக்க ...04 ஆம் பக்கம் பார்க்க

## ஜேர்மன் செல்லவிருந்த இரு தமிழ் இளைஞர் கைது

போலிப் பிரயாண ஆவணங்களுடன் ஜேர்மனி செல்ல முயன்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரு தமிழ் இளைஞர்களை கட்டுநாயக்கா விமான நிலைய குடிவரவு குடியகல்வு அதிகாரிகள் இரகசிய பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். ஒருவர் போலி விசாவுடனும் மற்றவர் போலிக் கடவுச் சீட்டுடனும் ஜேர்மனி செல்ல முற் —04 ஆம் பக்கம் பார்க்க

ஸ்ரான்லி திலகரட்னா புகார்

## எனது றபர் சீலை உபயோகித்து தபால்கள் அனுப்பப்படுகின்றன

முன்னாள் சபாநாயகர் ஸ்ரான்லி திலகரட்னாவின் பெயருடைய றபர் சீலைப் பாவித்து கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாக அவர் செய் வருகின்றனர்

இந்த றபர் சீலுடன் அனுப்பப்பட்ட சில கடிதங்களும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

## மட்டக்களப்பு பகுதியில் இந்து ஆலயங்களில் இராணுவம்

மட்டக்களப்பு பகுதியில் மூன்று ஆலயக் கட்டிடங்களில் ஒரு வருடத்திற்கு மேலாக இராணுவம் தங்கியுள்ளதால் ஆலய நித்திய பூசைகள் தடைப்பட்டுவருகின்றன.

மட்டக்களப்பு திரௌபதையம்மன் கோயில், கொத்துக்குளம் மாரியம்மன் கோயில், அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் ஆலய தீர்த்தக் குளக்கரைக் கட்டிடம் ஆகியவற்றிலேயே இராணுவம் தங்கியுள்ளது.

மற்றும் இந்து இளைஞர் சேவைக் கட்டடத்திலும் இராணுவ முகாம் இயங்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 08

## தோட்டத் தொழிலாளர்கள்

## பூநகரி, கௌதாரிமுனைப் பகுதியில்

பெயருடைய றபர் சிலைப் பாவித்து கடிதங்கள் அனுப் பப்பட்டுள்ளதாக அவர் செய் துள்ள புகார் மீது பொலி ஸார் விசாரணை செய்து

பப்பட்ட சில கடிதங்களும் பொலிஸாரினால் கைப் பற்றப்பட்டுள்ளன.

சுதந்திரக்கட்சி எம். பியான

—04 ஆம் பக்கம் பார்க்க

ளம் மாரியம்மன் கோயில், இறது. 08

## தோட்டத் தொழிலாளர்கள் 20 ஆம் திகதி வேலை நிறுத்தம்

5 லட்சம் தோட்டத் தொழிலாளர்கள் இம்மாதம் 20 ஆம் திகதி ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்யவுள்ளனர்.

பன்னிரண்டு தொழிற்சங் கங்களின் தொழிலாளர்கள் இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளனர்.

சம்பள உயர்வு, மாதாந் தச்சம் பளத்திட்டம், தொழிற்

—04 ஆம் பக்கம் பார்க்க

## மாவீரர் நாள்; எழுச்சி வாரம் இன்று முதல் அனுஷ்டிப்பு

தமிழீழ மாவீரர் நாளை எப் படிகொண்டாடுவது? என் பது பற்றியும், மாவீரர் வாரத் தில் செய்யவேண்டிய வேலை களை ஒழுங்கமைபபது பற்றி மக்கள் மத்தியில் எழுச்சியை ஊட்டுவதற்காகவும் இன்று 15-ம்திகதி முதல் 21-ம் திகதி வரை மாவீரர் எழுச்சி வாரம் அனுஷ்டிக்கப்படுகிறது.

இன்று முதல் வட்டவை தோறும் ஒரு வாரத்துக்குள் இரண்டு கூட்டங்களை நடாத்தி முடிப்பதுடன், பல கருத்தரங்குகளும் இந்நாள் களில் நடாத்தபபடவிருக்கின் றன.

இக்கூட்டங்களில் அனைத்து மக்களும் தவறாது கலந்து கொள்ளும்படி தமிழீழ மக்க ளுறவுக் கொள்கை முன்னெ டுப்புப்பிரிவினர்வேண்டுகோள்

—04 ஆம் பக்கம் பார்க்க

ஸ்ரீலங்கா இராணுவம்

## புலிகள் முகாம கைப்பற்றினாலும் தக்கவைக்க முடியாது

"ஸ்ரீலங்கா இராணுவம் முல்லைத்தீவுக் காட்டுப் பகுதி யில் புலிகளின் இரண்டொரு முகாம்களைக் கைப்பற்றிய தாகக் கூறுகின்றது. அப்படி யிருப்பினும் கூட அது பெரிய சாதனையெனக் கூறமுடியாது இக்காட்டுப் பகுதியில் அவர் கள் கூறும் அந்த முகாம்களை அவர்களால் தக்க வைத்துக் கொள்வது மிகவும் கடினமே"

இவ்வாறு புரொன்ட் லைன் இதழில் வெளியான கட்டுரை

—04 ஆம் பக்கம் பார்க்க

பூநகரி, கௌதாரிமுனைப் பகுதியில்

## 1000 ஏக்கர் பயிர்ச் செய்கை பாதிப்பு; பலரும் பரிதவிப்பு

ஸ்ரீலங்கா இராணுவ நடவ டிக்கையினையடுத்து பூநகரி, கௌதாரிமுனை, வெட்டுக் காடு, வன்னித்தளை, வினா சிலுடை, கல்முனை ஆகிய

...04 ஆம் பக்கம் பார்க்க

## ரூபவாஹினியும், வானொலியும் ராஜினாமாவை அறிவிக்கவில்லை

நாம் எமது அமைச்சர் பத விகளை ராஜினாமாச் செய் தது தொடர்பான செய்தி களை ரூபவாஹினியும், இலங்கை வானொலியும் அரச சார்பு பத்திரிகைகளும் தெரி விக்கவில்லை அவை ஜனாதி பதியின் செய்திகளையே மக் களுக்குத் தெரிவிக்கின்றன. மக்களுக்கு நாட்டில் என்ன நடக்கின்றன என்பது தெரிவ தில்லை.

இவ்வாறு தெற்கில் இடம் பெற்ற கூட்டமொன்றில் பேசிய முன்னாள் அமைச் சர் லலித் அத்துலத் முதலி கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர், ஜனநாயகம் பேசுகிறார் ஜனா திபதி ஆனால் நாட்டில் ஜன நாயகம் இல்லை, சுதந்திரம்

...04 ஆம் பக்கம் பார்க்க

## யாழ்ப்பாணத்தில் இறந்த ராணுவ சிப்பாய் பெண்ணாக மறுபிறப்பு எடுத்துள்ளார்!

1986 இல் யாழ்ப்பாணத்தில் மரணமான இராணுவச்சிப்பாய் பெண்ணாக மறுபிறப்பு எடுத்துள்ளதாகத் தெரி விக்கப்படும் சம்பவம் ரம்புகணைப்பகுதியில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது: பிலிப் குணவர்தனா என்ற இளைஞர் 1964 ஏப்ரல் 24 இல் பிறந்தார். 1985 மே 20 ஆம் திகதி ஸ்ரீலங்கா இராணுவத்தில் இணைந்து 1986 ஜுன் 6இல் இவர் யாழ்ப்பாணத்தில் மரணமானார். இவர் உடாகமவைச் சேர்ந்தவர். ரம்புகணை யில் பிறந்துள்ள மூன்று வயதுச் சிறுமியான துஷிதாஹேமாலினி தனது பூர்வீகம் பற்றி விவரிக்கிறார் தான் சிப்பா யாக இருந்துஇறந்தாகவும் தான் முன்புவசித்த வீட்டின் அடையாளங்களையும் அவர் தெரிவித்தார். 04-ம் பக்கம் பார்க்க

# சட்டவிரோதமாக குடியேறும் வெளிநாட்டவர்க்கு தொழில் வழங்க பிரான்ஸ் அரசு தடை!

பிரான்சில் சட்ட விரோத குடியேற்றக்காரர்களுக்கு தொழில் வழங்கும் தொழில திபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையெடுக்கப்படு மென பிரான்ஸ் அரசு அறிவித்துள்ளது. இந்த நடைமுறை கடந்த 2-ம் திகதி முதல் அங்கு அமுல் செய்யப்பட்டு வருவதாக அறிவிக்கப்படுகின்றது.

அத்துடன் அகதிகளை ஏற்றிவரும் விமான நிறுவனங்களுக்கு 1800 டாலர் அபராதம் விதிக்கப்படுமெனவும், இது விடயத்தில் மிகக் கடுமையான நடைமுறைகள் பின்பற்றப்படுமெனவும் பிரான்ஸ் அறிவித்துள்ளது.

சட்டவிரோதக் குடியேற்றக்காரர்களை பிரான்ஸிலிருந்து நாடு கடந்த வாடகைக்கு விமானங்களை அமர்த்துவது பற்றியும் ஆராயப்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## வகுப்பேற்றப் பரீட்சைகள்

## 29 ஆம் திகதிமுதல் நடைபெறும்

யாழ் மாவட்ட பாடசாலைகளின் வகுப்பேற்றப் பரீட்சைகள் பாடசாலை மட்டத்தில் இம்மாதம் 29, 30 ஆம் திகதிகளிலும் டிசம்பர் மாதம் 02, 03, 04 ஆம் திகதியிலும் நடாத்தப்பட வேண்டும் என யாழ் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்

பாடசாலை அதிபர்கள் வினாத்தாள்களைத்தாமே தயாரிக்க வேண்டும் எனவும், இவ் வினாத்தாள்களின் தொகுதிகளை அவர்களிடமிருந்து தொத்தணி அதிபர்கள் பெற்று கோட்டக்கல்வி அதிகாரிகளிடம் 5.12.91க்கு முன் ஒப்படைக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த மாணவர்களின் வகுப்பேற்றப் பரீட்சை சம்பந்தப்பட்ட கோட்டக் கல்வி அதிகாரிகளின் அறிவுறுத்தலின்படி நடத்த வேண்டும்.

1991 இல் ஆரம்பிக்கப்பட்ட க.பொ.த (உயர்தர) வகுப்புக்களுக்கும் ஒரு தவணைக்குரிய பாடத்திட்டங்கள் பூர்த்தி செய்து தவணைப் பரீட்சையை நடாத்த நடவடிக்கை எடுக்குமாறும் பணிக்கப்பட்டுள்ளது.

6.12.91 இல் மாணவர்களின் தேர்ச்சி அறிக்கை பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும் பணிப்பாளர் பணித்துள்ளார். (15)

## சேவையிலுள்ள ஊழியர்கள் பட்டம் பெற விசேட ஏற்பாடு

அரச திணைக்களங்களில் கடமைபுரியும் ஊழியர்கள் திறந்த பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கு விசேட ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன.

பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு இதற்கான புதிய திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளது.

இதன்படி எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் தொகுதி அரச ஊழியர் திறந்த பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பை ஆரம்பிப்பர்.

## கலாசாலை நேர்முகப்பரீட்சை இனி அந்தந்தமாவட்டங்களிலேயே

ஆசிரிய கலாசாலைகளுக்கு புதிய மாணவர்களைத் தெரிவதற்கான நேர்முகப்பரீட்சைகள் இனிமேல் அந்தந்த மாவட்டங்களிலேயே நடாத்தப் படவுள்ளன. இதுவரை இந் நேர்முகப் பரீட்சை கொழும்பிலேயே நடாத்தப்பட்டுவந்தது

இப்புதிய திட்டத்தின்படி 1992 ஆம் ஆண்டு ஆசிரிய கலாசாலை அனுமதிக்கான நேர்முகப் பரீட்சை வடக்கு உட்பட சகல பகுதிகளிலும் அந்தந்தமாவட்டங்களிலேயே நடாத்த படவுள்ளது.

நேர்முகப்பரீட்சை நடாத்தப்படவுள்ள திகதிகள் பற்றி அந்தந்த மாவட்டக் கல்விப்பணிப்பாளர்கள் அறிவிப்பர்.

### விநியோகம்

கெயர்-யு-எஸ் விவசாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பிரதேசத்திலுள்ள விவசாயிகளுக்கு அவ்வப்பகுதி உற்பத்திக் குழுக்களின் சிபார்சின் பேரில் கடந்த வாரம் 375 மண்வெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

## கடல் கொந்தளிப்பு, கடும்காற்று; மீனவர்களுக்கும் எச்சரிக்கை

தமிழக, வடதமிழீழக் கடற்பகுதிகளில் கடல் கொந்தளிப்பு அடுத்த சில தினங்களுக்குக் காணப்படுமென எச்சரிக்கப்பட்டுள்ளது.

காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் உருவாகியுள்ளதினால் இப்பகுதிகளில் கடற்கொந்தளிப்பும் கடும் காற்றும் காணப்படுமென சென்னை வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது, மீனவர்கள் கடலுக்குச்செல்லக் கூடாதெனவும் சென்னை வானிலை அவதான நிலையம் எச்சரித்துள்ளது.

கடல் மிகக்கொந்தளிப்பாக உள்ளதினால் தமிழகத்தில் கடலூர், இராமேஸ்வரம், புதுச்சேரி சென்னை, பாம்பன், நாகபட்டினம் தூத்துக்குடி மீன் பிடித் துறைமுகங்களில் எச்சரிக்கைக் கொடிகள் ஏற்...

## முதல்வர் ஜெயலலிதா சம்ஹார அவதாரம்

மறப்பதோ, மன்னிப்பதோ ஜெயலலிதாவின் அகராதியில் இல்லை முதலமைச்சராகி 100 நாட்களில் இதை எல்லோரும் நன்றாகவே புரிந்து கொள்ளச் செய்து விட்டார் ஜெயலலிதா.

1987 இல் எம். ஜி. ஆர். காலமானபோது அவர் சடலத்தைத் தாங்கிய பீரங்கிய வண்டியிலிருந்து ஜெயலலிதாவைப் பிடித்துத் தள்ளியதற்காக சென்ற...

ஆணா? பெண்ணா?

## விரும்பிய குழந்தையைப் பெற லண்டனில் புதியசிகிச்சை!

ஆண் அல்லது பெண் குழந்தையை விருப்பத்திற்கு ஏற்றவாறு பெற்றெடுக்க உதவும் புதிய வைத்தியசாலையொன்று இங்கிலாந்தில் அடுத்த மாதம் முதல் இயங்கவுள்ளது.

ஆண் அல்லது பெண்கருவை செயற்கை முறையில் விலக்கி விடுவதன் மூலம் இந்தச்சிகிச்சை மேற்கொள்ளப்படும். இதற்குகட்டணமாக 600 டாலரை வசூலிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த மருத்துவமனையின் செயற்பாட்டை இங்கிலாந்து திருச்சபையைச் சேர்ந்த ஆர்ச் பிஷப் யோர்க் கண்டித்துள்ளார். பாவனைப் பொருள்களைப் போல குழந்தையை உற்பத்தி செய்வதை ஏற்க முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

## பிரி. அரசு சட்டத்தரணி திடீர் ராஜினாமா

பிரிட்டிஷ் அரசின்பிரபல்யம் மிக்க சட்டத்தரணியான சேர் அலன் கிரீன் எவ்வித முன்னறிவித்தலுமின்றி ராஜினாமா செய்து சட்டத்துறை வல்லுநர்கள் மத்தியில் பரபரப்பைத் தோற்றுவித்துள்ளார்.

இவர் ராஜினாமாச் செய்வதற்கான காரணம், விலைமாது ஒருத்தியுடன் தொடர்பு கொண்டார் எனப் பொலிஸாரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டதேஎனத்தெரிய வந்துள்ளது.

★ வெடிகுண்டுப் பயமுறுத்தலை அடுத்து

## சிங்கப்பூர் - சென்னை விமானம் கொழும்பில் தரையிறக்கப்பட்டது!

குண்டு வைக்கப்பட்டுள்ளதாக விடுக்கப்பட்ட எச்சரிக்கையையடுத்து சிங்கப்பூர் ஏயர்லைன் நிறுவன விமானமொன்று நேற்று அதிகாலை அவசர அவசரமாக கட்டுநாயக்கா விமானநிலையத்தில் தரையிறக்கப்பட்டது.

இந்த விமானம் சிங்கப்பூரிலிருந்து 260 பயணிகளுடன் சென்னையைநோக்கிச்சென்று கொண்டிருக்கையில் பாதிவழியில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டதையடுத்து கட்டுநாயக்காவில் தரையிறக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது

விமானத்தை சோதனையிட்ட போது குண்டு எதுவும் அகப்படவில்லையெனவும், பயணிகள் கொழும்பில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களை சென்னைக்கு அனுப்ப மாற்று ஏற்பாடுகள் செய்ய படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது

விமானத்தில் பயணம் செய்தோரில் அனேகமானோர் தமிழர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## விமான நிலையத்தை இரவில் நாடும் சிங்கப்பூர் மாணவர்கள்

பாடங்களை மனப்பாடம் செய்து பரீட்சைக்குத் தங்களைத் தயார் படுத்துவதற்கான மிகச் சிறந்த இடமாக சிங்கப்பூர் மாணவர்கள் தங்களது நாட்டின் ஷாங்கி சர்வதேச விமானநிலையத்தையே கருதுகிறார்கள்.

'பிஸனஸ்ட்ரவலர்' சஞ்சிகை நடத்திய அபிப்பிராய வாக்கெடுப்பொன்றின் மூலம் இது தெரியவந்துள்ளது. உலகிலேயே மிகச் சிறந்த விமான நிலையமாகவும் சிங்கப்பூர் விமானநிலையத்தையே இச் சஞ்சிகை தெரிவு செய்துள்...

வீட்டில் தொலைக்காட்சி, தொலைபேசி தொல்லைகளால் படிப்பதற்கான 'மூட்' பாதிக்கப்படுகிறது விமான நிலையத்திலோ தொல்லைகள் எதுவுமே இல்லை என்கிறார் ஒரு சிங்கப்பூர் மாணவர்.

## கடல்வழி விநியோகத்திற்கு 'கடல்பறவைகளே' பொறுப்பாம்

கடல் வழியான ஆயுத விநியோகத்தை, மேற்கொள்வதற்கு விடுதலை புலிகள் 'கடல் பறவைகள்' என்னும் பிரிவைப் பயன்படுத்தி வருவதாக...

நிறுத்தி வைக்கப்படும் கப்பலில் இருந்து ஆயுதங்களை விசைப்படகுகளில் எடுத்துச் சென்று சேர்ப்பதே கடல் பறவைகளின் முக்கிய கடமை, ஆயுதக்கடத்தல் கப்பல் சிங்...

1987 இல் எம். ஜி. ஆர். காலமானபோது அவர் சடலத்தைத் தாங்கிய பீரங்கிய வண்டியிலிருந்து ஜெயலலிதாவைப் பிடித்துத் தள்ளியதற்காக சென்ற மாதம் பொலிஸ மூன்னாள் எம். எல். ஏ கே: பி. ராமலிங்கத்தை கைது செய்தது புகார் கொடுத்த இரண்டு வருடங்களுக்குள் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படாததால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது ஆனால் முதலமைச்சர் விடுவதாயில்லை. உயர்நீதி மன்றத்தில் அப்பீல் செய்திருக்கிறார்.

அவரது அதிகார பலிபீடத்தில் முதல் பலி கருணாநிதி அரசில் உள்துறை செயலராயிருந்த கே, நாகராசன். அவரது ராஜினாமா மறுக்கப்பட்டது பிறகு தராசு அலுவலகம் தாக்கப்பட்ட வழக்கில் தொடர்பாக நாகராசன் கைது செய்யப்பட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர்களின் தொலைபேசிகளை ஒட்டுக்கேட்க அரசு உத்தரவிட்டது என்று தி. மு க வின் பத்திரிகை தொடர்பாளர் ஆலடி அருணா குற்றஞ்சாட்டியபோது, அவர் மீது மான நஷ்ட வழக்குத் தொடரப்பட்டது. இது குறித்து கட்டுரை வெளியிட்ட நக்கீரன் ஆசிரியர், வெளியிடுபவர், நிருபர், கைது செய்யப்பட்டார்கள்

இல்லஸ்டரேட்டட் வீக்லி ஆஃப் இந்தியா போன்ற பத்திரிகைகளைக் கூட அவர் விட்டுவிடத் தயாரா இல்லை. சட்டமன்றத்தில் நடந்த சில நிகழ்ச்சிகள் குறித்த செய்தி சர்ச்சைக்குரிய விதத்தில் வெளியிட்டதற்காக அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் சபாநாயகரை கேட்டுக் கொண்டார்.

தி மு. க. அரசு தொடங்கிய நலவாழ்வுத் திட்டங்களை ரத்துச் செய்தார். கருணாநிதி துவக்கிய ஆதி திராவிடர்களுக்கான வீட்டு வசதி திட்டத்தைக் கூட நிறுத்தி வைத்தார். எல்லாவற்றையும் விட முக்கியம், தமிழ்நாடு இ. காங்கிரஸ தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி மீதான கிரிமினல் வழக்கு வாபஸ பெறப்பட்டது.

மீன் பிடித் துறைமுகங்களில் எச்சரிக்கைக் கொடிகள் ஏற்றப்பட்டுள்ளதாக நேற்று நண்பகல் அறிவிக்கப்பட்டது.

ஒத்த காலநிலையையுடைய தமிழ்நாட்டின், தென் பகுதியிலும், தமிழீழ வடபகுதிகளிலும் தொடர்ந்து மழை பெய்து வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன

★ பிந்திய தகவலொன்றின்படி தென் தமிழகக் கரையோரப் பகுதிகளில் 85 - 90 கிலோமீற்றர் வேகத்தில் புயல் வீசலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

விமான நிலையத்தையே இச் சஞ்சிகை தெரிவு செய்துள்ளது.

இறுதிப் பரீட்சைக்குத் தயார் செய்வதற்கு சிங்கப்பூர் மாணவர்கள் புத்தகங்களுடனும் படுக்கைவிரிப்புக்களுடனும் அமைதியான சூழல் கொண்டதும் பரந்தஇடவசதி கொண்டதுமான இவ் விமான நிலைய பயணிகள் மண்டபங்களில் இரவில் முகாமிடுகின்றனர்.

# அரசகருமமொழி ஆணைக்குழு; ஆறு உறுப்பினர்கள் நியமனம்

அரசகருமமொழி ஆணைக்குழுவுக்கு ஜனாதிபதியால் அறுவர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி சட்டத்தரணி சங்கத் தலைவரும், மனித உரிமையாளருமான டெஸ்மன் பெர்னாண்டோ தலைமையிலான இக்குழுவின் ஏனைய அங்கத்தவர்களாக ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி கே. விக்னராசா, நூலாசிரியர் நீல்குணசேகர, பேராதனைப் பல்கலைக்கழக சிங்களப்பேராசிரியர் கே. என். ஓ தருமதாச, முஸ்லிம் மத விவகார அமைச்சின் முன்னை நாள் செயலாளர் எஸ எம் ஜிப்ரி, ஓய்வுபெற்ற பொறியியலாளர் பி ரி மாணிக்கம் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அரச கரும மொழிச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கான சகல அதிகாரங்களும் இக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

கடல் பறவைகள்' என்னும் பிரிவைப் பயன்படுத்தி வருவதாக சென்னையிலிருந்து வெளிவரும் 'இந்து' பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

இந்த 'இந்து' இதழில் ஆயுதங்களை ஏற்றி வந்த படகு கைப்பற்றப்பட்டமை பற்றிய தகவல்களும் தரப்பட்டுள்ளன.

10 மாதமாக இந்த கடற்புலிகள் கடலில் இடைவிடாது பயணம் செய்துள்ளனர், சர்வதேசக் கடல் எல்லையில் சென்று சேர்ப்பதே கடல் பறவைகளின் முக்கிய கடமை, ஆயுதக்கடத்தல் கப்பல் சிங்கப்பூரிலிருந்து புறப்பட்டது அம்பலமாகியுள்ளது, கைப்பற்றப்பட்ட படகில் 100 வகையான பொருட்கள் இருந்தன. இவற்றில் 144 மெகாஹேட்ஸ் வலுவுள்ள தொலைத் தொடர்பு சாதனம் முக்கியமானது. போன்ற தகவல்களையும் 'இந்து' வெளியிட்டுள்ளது.

# பாடசாலைகளையும் சூழலையும் சுத்தமாகப் பேணப் பணிப்பு

பாடசாலை மற்றும் அலுவலகக் கட்டிடங்களையும் அதனைச் சூழ உள்ள பகுதிகளையும் சுத்தமாக வைத்திருக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என வட கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் சகல கல்விப் பணிப்பாளர்களையும் பணித்துள்ளார்.

இக் கட்டிடங்களின் பராமரிப்புக்கும், துப்புரவுக்கும் சகல கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களே பொறுப்பேற்க வேண்டும் எனவும் இதுதொடர்பாக' அரச கட்டிடங்களை நிர்வகிப்பதும், பராமரிப்பதும்' எனும் பொருளடங்கிய கைநூல் விரைவில் இவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட உள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

இக் கட்டிடப் பராமரிப்பை நேரடியாகப் பார்வையிட உயரதிகாரிகள் எந்நேரமும் வருகைதரலாம் எனவும் அவர் அறிவித்துள்ளார். (15)

# மேற்கு ஜேர்மன் 'செல்ஸ்விக்' மாகாணத்தில்

# அகதி அடைக்கலம் இனி இல்லை!

மேற்கு ஜேர்மன் மாகாணமான செல்ஸ்விக் - ஹோல்ஸ்டினில் இனி வெளிநாட்டு அகதிகள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜேர்மனியின் 16 மாகாணங்களில் பெரும்பாலானவற்றில் உள்ளதைப் போலவே அடைக்கலம் கோரும் அகதிகள் அங்கும் நிரம்பியுள்ளனர்.

இந்த அகதிகள் கிழக்கு மாகாணத்திற்கு அடுத்த வாரம் மீண்டும் திரும்பிச் சென்றுவிட வேண்டுமெனவும் இன்றேல் அவர்களின் அகதி விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு நாடுகடத்தப்படுவார்களெனவும் மேற்குமாகாணப் பிரதமர் பிஜோன் எங்கோம் எச்சரித்துள்ளார்

## நீதித்துறையில் புதிய மாற்றம்

இன்னும் சில மாதங்களில் ஆரம்ப நீதிமன்றங்கள் மஜிஸ்திரேட் நீதிமன்றங்களுக்குப் பதிலாகப் புதிய சிறிய நீதிமன்றங்கள் ஏற்படுத்தப் படவுள்ளன,

நாட்டின் 207 அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் இணக்க சபைகள் நிறுவப்படவுள்ளன. இப்போது 110 இணக்க சபைகள் நிறுவப்பட்டுள்ளதாகவும் நீதியமைச்சர் ஹமீது தெரிவித்துள்ளார், (08)

## 'மாவீரர்களின் இரத்தத்தினால் நம்மண்மேலும் செம்மையாகிறது'

தேசத்தின் விடுதலைக்காகத் தீயையே தின்றவர்கள், எதிர்கால நாட்டின் இனிய உதயத்திற்காகத் தமது இளமை வாழ்வையே அர்ப்பணித்துவிட்டனர். இவர்களில் பெரும்பாலானோர் மலரத் துடிக்கின்ற அரும்புகள் சிலர் வாழ்க்கை வானத்தில் சுதந்திரமாகச் சிறகடித்துக் கொண்டிருக்கின்ற இனிய சிட்டுக்கள்.

இவ்விதமான பச்சைத் தளிர்களாக நடாத்தப்படுகின்ற ஆயுதப் போராட்டத்திலே, விடுதலை வேள்வியிலே தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர்களைத்தான் நாம் 'மாவீரர்கள்' என்று அழைக்கின்றோம். நமது மண் இயல்பாகவே சிவப்பு மண்ணாக இருந்தாலும் கூட, இந்தச் செம்மை மாவீரர்களின் இரத்தத்தினால், மேலும், மேலும் கரும் செம்மையாகிக் கொண்டிருக்கிறது

தமிழீழ மாவீரர் நாள் தொடர்பாகத் தமிழீழ மக்களுறவுக் கொள்கை முன்னெடுப்புப் பிரிவின் பிரதிப் பொறுப்பாளர் கவிஞர் வாஞ்சிநாதன் 'புலிகளின் குரல்' வானொலியில் ஆற்றிய உரையில் இவ்வாறு தெரிவித்தார்.

நமது தேசியக் கொடியான புலிக்கொடி, எமது தலைவர் திரு. வே பிரபாகரன் அவர்களின் ஆலோசனைக்கு இணங்க வடிவமைக்கப்பட்டு, 1977 ஆம் ஆண்டு மதுரை நடராசன் அவர்களால் வரையப்பட்டது, எமது தேசியக் கொடியின் நிறங்களாக மஞ்சள், சிவப்பு, கறுப்பு என்பன எமது மக்களின் விடுதலைத் தாகங்களைத் தாங்கி நிற்கின்றன. எமது மக்களின் இரத்தத்தாலும் மாவீரர்களின் இரத்தத்தாலும் தோய்த்து எடுக்கப்பட்ட எமது தேசியக் கொடியான, புலிக்கொடியை எமது உயிரினும் மேலாக மதிக்க வேண்

## வீட்டுச்சூழல் அபிவிருத்திப் போட்டி

### சிறுபோகம் 1991 - யாழ்ப்பாண மாவட்டம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் விவசாய அபிவிருத்தியை மேம்படுத்தும் நோக்கமாகவும், எமது மாவட்டத்தில் வாழும் மக்களின் வீட்டுச் சூழலின் அபிவிருத்தியை, பராமரிப்பை, ஊக்குவிக்கவும் எம் மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதோடு போஷாக்கு உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டும் மேற்படி போட்டியை எமது மாவட்டத்தில் நடத்தி பெறுமதி வாய்ந்த பரிசில்களை வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டியில் யாழ்ப்பாண மாவட்டத்தில் வாழும் எவரும் பங்குபற்றலாம்- நிபந்தனைகள் பின்வருமாறு:

அ. விண்ணப்பம் முடிவுத் திகதி: 30-11-91

அனுப்ப வேண்டிய முகவரி: பிரிவு உதவி அரசாங்க அதிபருக்கு

குறிப்பு:

விண்ணப் படிவம் எதுவுமில்லை. விண்ணப்பதாரிகள் சாதாரண தாளில் விண்ணப்பத்தை அனுப்பிவைக்கலாம் போட்டியை ஒழுங்கு செய்வோர் எடுக்கும் முடிவுகளை ஏற்றுக் கொள்வதாகவும், விண்ணப்பத்தில் பிரகடனம் செய்யவேண்டும். போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் பின்வரும் அம்சங்களை தனது வீட்டுச் சூழலில் ஏற்படுத்தி மத்தியஸ்தத்திற்கு இடம்கொடுக்க வேண்டும்.

1. பயிர்கள்

பருப்புவகை:

குறைந்தது 1/8 பரப்பில் பாசிப்பயறு செய்கை பண்ணுவது விரும்பத்தக்கது

மரக்கறி வகை:

ஒரு இலை மரக்கறி உட்பட ஏதேனும் நான்கு உள்ளூர் மரக்கறிப்பயிர்கள் ஒருபயிரின் குறைந்த பரப்பளவு 15' × 10'.

கிழங்கு வகை:

மரவள்ளி/வத்தாளை - குறைந்தது 30 சதுர அடி

பழமரம்:

பப்பாசி 3- 5 மரங்கள்

வாழை 2 - 3 நிலையங்கள்

பிறபயனுள்ள மரங்கள்:

எலுமிச்சை - குறைந்தது 1 அகத்தி - குறைந்தது 1

முருங்கை - குறைந்தது 1 இப்பில் இப்பில் - குறைந்தது 3

தளபாடத்துக்குரிய மரங்கள்:

வேம்பு தேக்கு வேலியோரமாக

வேறு பொருளாதார முக்கியத்துவமான மரங்கள்:

தென்னை - குறைந்தது — 03 பனை (வேலியில்) - குறைந்தது — 05

கமுகு - குறைந்தது — 03

2. கூட்டெரு தயாரிப்பு:

குவியல் / குழி - 15×8 (குறைந்தது ஒன்று)

3. மாடு / ஆடு / கோழி வளர்ப்பு:

குடும்ப அங்கத்தவர்களுடைய தேவையை மேலும் பூர்த்தி செய்யக் கூடிய முயற்சியாக இருக்கவேண்டும்.

குறிப்பு:

காடுகளும், கற்பாறைகளுமாக இருந்த மலைநாட்டை உதிரத்தைச் சிந்தி செல்வம் கொழிக்கும் நாடாக மாற்றியவர்கள் இந்தியத் தமிழர்கள். அவர்களது குடியுரிமை பறிக்கப்பட்ட தினம் கார்த்திகை பதினைந்து.

## தேயிலைக்கு வளம் சேர்க்க செந்நீர் சிந்தியோர் தினம்

— வே. தவேந்திரன்

ஆங்கிலேயரிடமிருந்து இலங்கை சுதந்திரம் பெற்றதும், அன்றைய அரசு தமிழ் பேசும் மக்களுக்கெதிராக எடுத்த முதல் வகுப்பு வாத நடவடிக்கை இந்திய வம்சா வளியினரின் குடியுரிமையைப் பறித்து அவர்களுக்கு 'நாடற்றவர்கள்' என நாமகரணம் சூட்டியமையே.

இந்தியத் தமிழர்கள் இங்கு தாமாக வரவில்லை. வரவழைக்கப்பட்டார்கள்.

காடுகளையும், கற்பாறைகளையும் அழித்துத் தேயிலைத் தோட்டமாகவும், ரப்பர் தோட்டமாகவும் உருவாக்குவதற்கு உழைப்பாளிகள் தேவைப்பட்டனர். இலங்கையும், இந்தியாவும் ஆங்கில ஆட்சிக்குள் இருந்த காலம் அது. எனவே இந்தியத் தமிழர்களின் உழைப்பைப் பெறுவதில் ஆங்கிலேயர் ஆர்வம் காட்டினர்.

சிங்களத் தொழிலாளர்களால் வனங்களை அழிப்பதும், கற்பாறைகளை உடைப்பதும் இயலாத செயல் என ஆங்கிலேயர்களுக்குத் தெரியும்.

உதிரத்தைச் சிந்தி உழைக்கும் ஆற்றல் படைத்த இந்தியத் தமிழர்களை ஆங்கிலேயர் 19 ஆம் நூற்றாண்டு இடைப் பகுதியில் ஆயிரக்கணக்கில் இங்கு கொண்டு வந்து குடியேற்றினர்.

இவர்கள் இந்நாட்டிற்குத் தாமாக வந்தவர்களல்ல. 19 ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் சிங்களவர்கள் நிலஉடமையாளர்களாகவும் தீவிர சுதேசியப் பற்று மிக்கவர்களாகவும் இருந்தனர்.

மனிதச் சுவடுகள் படாத 2000 அடிக்கு மேற்பட்ட மலைசார் அடர்கானகமாயிருந்த இன்றைய மத்திய மாகாணம் அன்று இவர்களது கடின உழைப்பால் செல்வம் கொழிக்கும் பெருந் தோட்டங்களாயின இம்முயற்சியின்போது கொடிய கொள்ளை நோயால் அம்மண்ணுக்கே உரமாகிப் போனவர்களின் எண்ணிக்கை சொல்லுந்தரமன்று,

உள்நாட்டுச் சிங்களவர்களுடன் ஒட்ட முடியாத வேறுபட்ட அந்நிய மக்களைப் பெருந் தோட்டத்துறையில் ஈடுபடுத்தியதன் மூலம் மலிவானதும், இலகுவாகச் சுரண்டக் கூடியதுமான இவர்களது உழைப்பைப் பயன்படுத்தி பிரித்தானியர் தமது உச்ச இலாப நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டனர். பெருந் தோட்டங்களை அமைக்கப் பெருமளவு நிலம் தேவைப்பட்டதனால் முறையே 1848, 1897 ஆம் ஆண்டுகளில் 'தரிசு நிலச் சட்டத்தை' இயற்றி எழுத்துச் சான்றுகள் இல்லாத காணிகள் முழுவதையும் பிரித்தானியப் பட்டயம் பெற்ற 'கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனி' சுவீகரித்துக் கொண்டது.

பெருந் தோட்டப் பயிராகக் கோப்பி செய்கை பண்ணப்பட்டு, அது நோயினால் அழிவுற, பின்பு தேயிலை வளர்க்கப்பட்டது. இதில் வேலை செய்த இவர்களுக்கு மிகக்குறைந்த கூலியும், குதிரை 'லயன்களை' வாழ்வதற்கும் கொடுத்தனர். தென் இந்தியாவிலும், இங்கும் இவர்களுக்குப் பல்வேறு தேவைகளுக்கும் கடன்களைக் 'கங்காணி' எனப்படுபவர்கள் கொடுத்து மீளாக் கடனாளிகளாக்கித் தோட்டப்புற வாழ்க்கையில் இருந்து விடுபடாதவாறு அடிமைப்படுத்திக் கொண்டனர்.

பெருந் தோட்ட விளை பொருள்களின் ஏற்றுமதியில் இலங்கையின் பொருளாதாரம் பெருமளவு சார்புத் தன்மை கொண்டிருந்தது. மேலும் ஒரே சமூகத்தைச் சேர்ந்த, தொழிற் சங்க ரீதியாக ஸ்தாபன மயப்பட்ட வர்க்கப் பலமிக்க அரசியல் சக்தியாகவும் இவர்கள் அப்போது இருந்தனர். அத்துடன் 1947 இல் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் 7 மலையகத் தமிழர் பிரதிநிதிகளும், 17 இடதுசாரித பிரதிநிதிகளும் இவர்களது வாக்குரிமைப் பலத்தால் தெரிவானார்கள்.

இந்நிலைமை எதிர்காலத்தில் இவர்கள் முன்னெடுக்கும் எந்த ஒரு போராட்ட வெற்றிக்கும், இடதுசாரிகளின் அரசி

3. மாடு / ஆடு / கோழி வளர்ப்பு:
குடும்ப அங்கத்தவர்களுடைய தேவையை மேலும் பூர்த்தி செய்யக் கூடிய முயற்சியாக இருக்கவேண்டும்.

குறிப்பு:
பொருத்தமாக உறைவிடம் இருத்தல் அவசியம்.

ஆ. போட்டிகள் பின்வரும் மட்டங்களில் மத்தியஸ்தம் செய்யப்படும்

| மட்டம் | பார்வையிடும் திகதி |
|---|---|
| 1. உற்பத்திக்குழு மட்டம் | ஜனவரி 21 ம் திகதி தொடக்கம் |
| 2. உதவி அரசாங்க அதிபர் மட்டம் | மாசி 15 ம் திகதி வரை |
| 3. மாவட்டக் குழு மட்டம் | |

இ. பரிசில்கள்:

குறிப்பு:
1. பணமாக / பொருள்களாக வழங்கப்படும்.
2. பின்வரும் தொகைக்குக் குறையாத பெறுமதியுள்ள பரிசில்கள் வழங்கப் படும்.

| மட்டம் | பெறுமதி | |
|---|---|---|
| 1. உற்பத்திக்குழு மட்டம் | 1-ம் இடம், ரூபா. | மூன்று இடங்களுக்கு தகுந்த பரிசுகள் வழங்கப் படும். |
| 2. உதவி அரசாங்க அதிபர் மட்டம் | 2-ம் இடம், ரூபா. | |
| 3. மாவட்டக்குழு மட்டம் | 3-ம் இடம், ரூபா. | |

எமது இப்முயற்சியில் பெருமளவில் பங்கு கொண்டு எமது மாவட்ட வளர்ச்சிக்கு உதவுமாறு எமது மாவட்டமக்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

11025

செயலகம்
யாழ்ப்பாணம்.

கா. மாணிக்கவாசகர்
அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்
யாழ். மாவட்டம்.

தோய்த்து எடுக்கப்பட்ட எமது தேசியக் கொடியான, புலிக்கொடியை எமது உயிரினும் மேலாக மதிக்க வேண்டும்; கௌரவிக்க வெண்டும்; போற்ற வேண்டும்;

எந்த இலட்சியத்திற்காக இந்த மாவீரர்கள் மடிந்தார்களோ, அந்த இலட்சியங்களை வென்றெடுக்க, எமது தேசியத் தலைவரான வேலுப்பிள்ளை பிரபாகரனின் தலைமையிலே எல்லோரும் அணி திரளுவோம்; அணி திரள வேண்டும் என அவர் தனதுரையில் மேலும் தெரிவித்தார்.

## சிறு விளம்பரம்

### சோதிடம்

தீராத கடன் தொல்லை, தொழில் நட்டம், கல்விக் குழப்பம், விவாகம் நடவாமை போன்ற கவலைகள் நீங்கி அதிர்ஷ்டத்துடன் வாழ சாதகத்துடன் நேரில் வரவும், பலன் தவறினால் பணம் திரும்பப் பெற உத்தரவாதம், ஸ்ரீசக்தி கணேஷ உபாசகர், ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம் (ஸ்ரீ வீரமாகாளி கோவிலடி) நல்லூர்.

11018

னார்கள்.

இந்நிலைமை எதிர்காலத்தில் இவர்கள் முன்னெடுக்கும் எந்த ஒரு போராட்ட வெற்றிக்கும், இடதுசாரிகளின் அரசியல் ஆதிக்கத்துக்கும் கால்கோளாக அமையும் எனக் கருதிய அன்றைய சிங்களப் பழமைவாதிகள் 'இந்திய விஸ்தரிப்பு வாதப் பிரதிநிதித்துவத்தை ஒழித்தல், கம்யூனிச அபாயத்திலிருந்து பௌத்தத்தைப் பாதுகாத்தல்' எனும் இரு கோஷங்களை முன்வைத்து முன்னோடி நடவடிக்கையாக 1936 இல் உள்ளூராட்சித் தேர்தலில் தோட்டத் தொழிலாளர்களுக்கு வாக்களிக்கும் உரிமையை மறுத்தனர். இதன் அடுத்த கட்டமாகவே 1948 கார்த்திகைத் திங்கள் 15 இல் குடியுரிமைச் சட்டம் இயற்றப்பட்டு அவர்கள் இலங்கையின் மத்திய பகுதியிலேயே 'நாடற்றவர்கள்' எனப் பெயர் சூட்டப்பெட்டுச் சிறுபான்மையில் ஒரு பகுதியாகக் காட்டப்பட்டனர்;

தோட்டத் தொழிலாளர்களின் வாக்குகளைப் பக்கபலமாகக் கொண்டு 17 பாராளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றிய இடதுசாரிகள் கூட அவர்களது வாக்குரிமை பறிக்கப்பட்டு நாடற்றவராக்கப் பட்டபோது பெரும்பான்மை இனச் சிங்கள மக்களின் வாக்குகள் தமக்கு எதிர்காலத்தில் கிடைக்காது போய்விடுமோ என்ற அச்சத்தில் பெயரளவிற்கு மட்டும் எதிர்த்துக் குரல் கொடுத்ததுடன் நின்று தமது சந்தர்ப்பவாத அரசியலை படமிட்டுக் காட்டினர். பிற்காலத்தில் தோட்டத் தொழிலாளரைக் குறித்து ''இந்திய எதிர்ப்பு வாதம்'' பேசியமை வியப்புக்குரியதே.

''இலங்கை இந்தியக் காங்கிரஸ்'' என்ற பெயருடன் இயங்கிவந்த தோட்டத் தொழிலாளர் பெரும்பான்மையோரின் தொழிற்சங்கம் 1950 இல் ''இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்'' (I.T K ) எனும் பெயர் மாற்றம் பெற்று இன்று வரை அப்பெயருடனேயே இயங்கி வருகின்றது இ.தொ.கா. வின் வரலாற்றில் பிரச்சினைகள் வரும்போது தொழிலாளர்களே சுயமாக வேலை நிறுத்தப் போராட்டங்களில் ஈடுபட்டு ஈடுபடுவார்கள். ஆனால் தலைமையோ அற்ப சொற்ப சலுகைகளை அரசிடமிருந்து பெற்றுக்கொண்டு போராட்டத்தைக் காட்டிக் கொடுத்து அதனை உயர்த்திப் பிடித்து அரசியல் விளம்பரம் செய்து கொள்ளும்.

(வளரும்)

## உலக அரங்கில்

### வியட்நாமில் அகப்பட்ட விமானி ரஷ்யாவில்?

வியட்நாம் போரின்போது காணாமற் போன அமெரிக்க விமானி ஒருவர் ரஷ்யாவில் உள்ளார் என்று வெளிவந்த தகவல் குறித்து மொஸ்கோவில் உள்ள அமெரிக்க தூதரகம் ஆராய்ந்து வருகிறது

1967 இல் வியட்நாமில் சுட்டு வீழ்த்தப்பட்ட அமெரிக்க விமானப்படை விமானி வியட்நாமிலிருந்து ரஷ்யா கொண்டு செல்லப்பட்டதாகவும், அவர் தற்போது கசக்ஸ்தான் குடியரசில் வாழ்வதாகவும் ரஷ்ய பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

இதன் உண்மை நிலையை ஆராய அமெரிக்க தூதரகம் விசாரணைக்குழு ஒன்றை அக்குடியரசுக்கு தற்போது அனுப்பியுள்ளது. எனினும் இதை ரஷ்ய தரப்பு மறுத்துள்ளது.

### இளவரசர் சிஹானுக் தாயகம் திரும்பினார்

13 வருடகால அஞ்ஞாதவாசத்தின் பின் இளவரசர் நொராடன் சிஹானுக்(67)நேற்று கம்போடியா திரும்பினார். சீன விமானத்தில் தலைநகர் நொம்பென் வந்தபோது பொதுமக்களால் அமோக வரவேற்பு அளிக்க பட்டது.

இதுவரை சீனாவிலிருந்து அரசியல் எதிரியும் தற்போதைய கம்போடியப் பிரதமருமான ஹொன்சென் அழைத்து வந்தார்

கம்போடியாவில் போரிட்ட 4 போராளிக்குழுக்களிடையே கடந்தமாதம் பாரிஸில் ஏற்பட்ட சமாதான உடன்படிக்கையை அடுத்தே இளவரசர் சிஹானுக் நேற்று நாடு திரும்பினார். கம்போடியாவில் பொதுத் தேர்தல் வரை அமையவுள்ள இடைக்கால அரசுக்கு சிஹானுக் தலைமை தாங்குவார்.

இதேவேளை கம்போடியாவில் ஐ நா சமாதானப் படையினரும் தமது நடவடிக்கைகளை விரிவு படுத்தி வருகின்றனர்.

### ஐ. நா. அமைதிப்படை வர இணக்கம்

குரோவேஷியாவில் ஐ நா. அமைதிப்படையை நிறுத்த குரோவேஷியாவும் அதற்கு எதிராகப் போரிடும் சேர்பிய தலைமை யூகோஸ்லேவிய இராணுவத் தரப்பும் இணக்கம் தெரிவித்துள்ளன.

இரு தரப்புக்குமிடையே சமரஸ பேச்சுத் தூதுவராக செயற்பட்டு வந்த ஐரோப்பியப் பொருளாதார சமூக பிரமுகர் கரிங்டன் பிரபு இத்தகவலை நேற்று வெளியிட்டார்.

குரோவேஷியாவின் நான்கில் ஒரு பகுதி நிலப்பரப்பை தற்போது சேர்பியன் தலைமை யூகோ சமஷ்டி இராணுவம் கைப்பற்றியுள்ளது போர் தொடர்ந்தால் குரோவேஷியா முழுவதும் பறிபோய் விடும் என குரோவேஷியா அச்சம் கொண்டுள்ளது எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதேவேளை நேற்றும் குரோவேஷியாவின் புகோவா நகரில் மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

### இந்தோனேஷியா மீது கண்டனங்கள்

இந்தோனேஷியாவின் தீவுகளில் ஒன்றான கிழக்குத் தீமோரில் இந்தோனேஷிய இராணுவம் நடாத்திய துப்பாக்கிச் சூட்டில் 19 பேரே பலியானதாக அந்நாட்டு இராணுவத் தளபதி அறிவித்துள்ளார்.

முன்னதாக இச் சூட்டுச் சம்பவத்தில் 115 பேர் பலியானதாகச் செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது

இரு இளைஞர்களின் சடலங்களை அங்குள்ள சேமக்காலையில் பொதுமக்கள் திரண்டு அடக்கம் செய்துகொண்டிருந்தபோது இந்தோனேஷிய இராணுவம் கண்டபடி துப்பாக்கிச் சூடு நிகழ்த்தியது.

இறந்தவர்கள் தொகை குறைவானது எனவும் பொதுமக்கள் இராணுவத்தினரைத் தாக்க முயன்றபோது படையினர் சுட நேர்ந்ததாக இராணுவத் தளபதி குறிப்பிட்டார்

# ஜனாதிபதிப் பதவி ஆசை தனக்கு இல்லை என்கிறார் ஸ்ரீமாவோ

ஜனாதிபதி பிரேமதாஸ மீது கொண்டுவரப்பட்ட குற்றவியல் பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக அவர் இன்னமும் வாய்திறக்கவில்லை இவ்வாறு சுதந்திரக் கட்சித்தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தெற்கில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில்கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர்; ஜனாதிபதி பதவியில் இருக்க வேண்டும் என்ற ஆசைஎனக்கு இல்லை பாராளுமன்றத்திற்கு கூடுதலான அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என்பதே எமது கோரிக்கை.

கடந்த ஜனாதிபதி தேர்தல் காலத்திலும் ஜனாதிபதி ஆட்சி முறை குறித்து நான் விளக்கிக்கூறியுள்ளேன்.

பாராளுமன்றத் திறப்பு விழாவன்று ஜனாதிபதியிடம் பல கேள்விகளை நாம் எழுப்பினோம். ஆனால் அவர் பதிலளிக்காது மௌனமாகவே இருந்தார். மௌனமாக இருந்தபடியால் அவர் குற்றவியல் பிரேரணையை ஏற்றுக்கொண்டுள்ளார்.

எதிர்க்கட்சியினரின் கருத்துக்களை எடுத்துக்கூற ஒரு பொதுசனத்தொடர்பு சாதனங்களும் இல்லை. அப்படி எமது கருத்துக்களை வெளியிடும் பத்திரிகை நிறுவனங்கள் மிரட்டப்படுகின்றன.

ரூபவாஹினி, ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்அரச சார்பு பத்திரிகை நிறுவனம் என்பன ஜனாதிபதியின் சொத்துக்களே என்றார். (06

**மாவீரர்...**

விடுத்துள்ளனர். அனைத்துக் கூட்டங்களிலும் வி. பு. மா. முன்னணிப் பிரமுகர்கள் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள்.

**கடும்...**

முடியாமலும், இரவு நேரம் உறங்கமுடியாமலும் இவர்கள் அவலப்படுவதைக் காணமுடிகிறது.

இதே நேரம் சுகாதார வசதிகள் இன்மையால் தொற்று நோய் பரவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 08

**இந்தியாவிலிருந்து...**

எனவும் அவர் அப்போது சுட்டிக்காட்டினார்.

அகதிகளை திருப்பி அனுப்பும் போக்குவரத்து நடைமுறைகளை இந்தியா கவனிக்கலாம். எனினும் அகதிகள் திரும்பும் திகதியை ஒரு மாத காலத்திற்கு முன்பாகவே இந்தியா அறிவிக்க வேண்டும் எனவும் கிறிஸ்ரிடிசில்வா குறிப்பிட்டார்.

எனினும் அகதிகளை திருப்பி அனுப்பும் இறுதித் திகதி ஏதும் முடிவு செய்யப்படவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஸ்ரீ லங்காவில் நிலைமை சுமூகமான பின்னரே அகதிகள் திருப்பியனுப்பப்படுவர் என இந்திய மத்திய அரசு கூறிக்கொள்கின்ற போதி

# வழக்குத் தாக்கல் செய்வேன் என்கிறார் சர்வோதய தலைவர்

சர்வோதய ஸ்தாபனத்திற்கு நெதர்லாந்திலிருந்து தருவிக்கப்பட்ட அச்சு இயந்திரத்தை அரசு பறிமுதல் செய்தது அடிப்படை மனித உரிமைகளை மீறிய ஒரு செயலாகும்''

இவ்வாறு சர்வோதயத் தலைவர் டாக்டர் ஏ. ரி ஆரியரத்ன மேற்படி விவகாரம் தொடர்பாக கருத்து வெளியிடுகையில் கூறினார்.

இந்த அச்சு இயந்திரத்திற்கு சுங்கவரியாக 31 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலுத்தியதாகவும் அதனை பெறமுயன்றபோது உயர்மட்டத்திலிருந்து அந்த இயந்திரத்தைப் பறிமுதல் செய்யுமாறு உத்தரவு வந்துள்ளதாகத் தனக்குத் தெரிவிக்கப்பட்டதாகவும் அவர் மேலும் கூறினார்.

இவ்விடயம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகவும் அவர் கூறினார்.

**ஆறு—**

இவை இன்று விநியோகத்தை மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுவதாகவும்.

நேற்றுக்கால நிலை சீர்கேடு காரணமாகவும் ஏனைய ப. நோ. கூ. சங்கங்கள் தங்களுக்குரியவற்றை எடுத்துச் செல்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளதென்று அவர் தெரிவித்தார் ஒவ்வொரு ப. நோ கூ. சங்கங்களிலுமுள்ள பாவனையாளர்களது பங்கீட்டு அட்டைகளின் தொகைக்கு ஏற்பவே பொருள்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். 25

**வெளிச்சந்தையில்...**

வைப் பெறாதவர்களாக (கலோறி) இருப்பதாகவும் செஞ்சிலுவைச் சங்கத்தினாலும், யாழ் மாநகர சுகாதார வைத்திய அதிகாரிகளினாலும் சுட்டிக்காட்டப்பட்டது.

வெளிச் சந்தையில் விற்பனவு செய்யப்படாமல் தடுப்பதற்கும், உரிய பாலமாவின் சத்துக்களைக் குழந்தைகளும், கர்ப்பிணித் தாய்மார்களும் பெற்றுக் கொள்வதற்காகவும் மாற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இப் பால் மாவினை முகாம்களில் கரைத்து வழங்குவதன் மூலம் எதிர்பார்க்கும் பலனை அடைய முடியுமா? என்று பரீ சார்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட விருக்கின்றன என்று மேலும் தெரிய வருகின்றது, 25

**ஆசியப்—**

தொடர்பாக பி. பி ஸி

### மாவீரர் எழுச்சிவாரக்கூட்டம்

15ஆம் திகதி தொடக்கம் 20ஆம் திகதி வரை நடைபெறவுள்ள மாவீரர் எழுச்சிவாரத்தில் யாழ்மாவட்டத்தில் வலிகாமம் வடமராட்சி தென்மராட்சிப் பிரிவுகளில் எழுச்சி வாரக் கூட்டங்கள் நடைபெறவுள்ளன,

இன்று15ஆம் திகதி வலிகாமம் பிரிவில் மாலை 7.00 மணிக்கு, அரியாலை புங்கன்குளம் சனசமூக நிலையத்திலும்,மானிப்பாய் மெமோறியல் கல்லூரி மண்டபத்திலும், வடமராட்சிப் பிரிவில் மாலை 7 மணிக்கு கரவெட்டி கரணவாய் மகாவித்தியாலய மண்டபத்திலும் எழுச்சிக் கூட்டங்கள் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பிரமுகர்கள் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள் தமிழீழ மக்கள் அனைவரும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி மக்களுறவுக் கொள்கை முன்னெடுப்பு பிரிவினர் கேட்டுக் கொள்கின்றனர்

### கல்வி அபிவிருத்தித்திட்ட தயாரிப்பு; இன்று முதல் 4 நாள்கள் கருத்தரங்கு

பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட பிரிவில் 1992 ஆம், 1993 ஆம், 1994 ஆம் ஆண்டுகளுக்கான மூன்றாண்டுக் கல்வி அபிவிருத்தித்திட்டம் தயாரிப்பது சம்பந்தமாக திட்டமிடல் வள அபிவிருத்தியினருக்கான பயிற்சி நெறி ஒன்று இன்று முதல் நடைபெறவுள்ளது

தெல்லிப்பழை, காங்கேசன்துறைக் கொத்தணிகளைச் சேர்ந்த பாடசாலைகளுக்கு மல்லாகம் மகாவித்தியாலயத்திலும் அளவெட்டி, அம்பனை, இளவாலைக் கொத்தணிகளைச் சேர்ந்த பாடசாலைகளுக்கு அளவெட்டி அருணோதயாக் கல்லூரியிலும், வட்டுக்கோட்டை, பண்டத்தரிப்புக் கொத்தணிகளைச் சேர்ந்த பாடசாலைகளுக்கு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலும் காரைநகர், சுழிபுரம் கொத்தணிகளைச் சேர்ந்த பாடசாலைகளுக்கு சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியிலும் இன்று

**100 ஏக்கர்...**

மக்கள் இராணுவத்தினரைத் தாக்க முயன்றபோது படையினர் சுட நேர்ந்ததாக இராணுவத் தளபதி குறிப்பிட்டார்

இதனிடையே இப்படுகொலையை அவுஸ்திரேலியா, போர்த்துக்கல், ஜப்பான், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் என்பன கண்டித்துள்ளன.


# இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

## யாழ்ப்பாணக் கிளை

## நிறைவேற்றுத் திட்டமிடல் அதிகாரி

எமது பணிமனையில் திட்டங்களைத் திறம்பட நடைமுறைப்படுத்தக் கூடியவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கல்வி, தகுதி, ஆற்றல், அனுபவம், திட்டங்களை நிறைவேற்றும் தன்மை, நிர்வாகத் திறமை, வெளிநாட்டு நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளும் தகைமை, சேவை செய்யும் ஆற்றல் உள்ளோர் விரும்பப்படுவர்.

விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடைசித் திகதி 20,11,1991 நேர்முகப் பரீட்சை 21-11-1991 முற்பகல் 9-00 மணிக்கு நடைபெறும், தனித்தனி கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது-

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்,
12-11.1991

ச. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்.

11026



இப்பத்திரிகை மூரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார் வீதி 'லக்ஷ்மி பிரிண்டேர்ஸ்'இல் உள்ள அச்சகத்தில் 15.11-91 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


கள் திருப்பியனுப்பப்படுவர் என இந்திய மத்திய அரசு கூறிக் கொள்கின்ற போதிலும் அகதிகளை அனுப்புவதில் மும்முரம் காட்டுகிறது என்று பி. பி. ஸி நேற்றிரவு குறிப்பிட்டது.

## தோட்டத்...

சங்க உரிமை, தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு வேலை வாய்ப்பு போன்ற பல கோரிக்கைகளை முன்வைத்து இவ் வேலை நிறுத்தம் இடம் பெறவுள்ளது.

## ஜேர்மன்...

பட்ட போதே பிடிபட்டனர்.

கொழும்பிலுள்ள ஏஜென்ட் ஒருவரிடம் தலா ஒன்றரை இலட்சம் ரூபா கொடுத்தே இப்பிரயாண ஆவணங்களைரு பெற்றுக் கொண்டதாக இப்வரும் பொலிசாரிடம் தெரிவித்தனர். 08

## எனது...

ரான்லி திலகரட்னா ஜனாதிபதிக்கு எதிரான குற்றவியல் பிரேரணையை எதிர்த்துள்ளதால் இவரை சுதந்திரக் கட்சியின் தலைமைப் பீடம் கட்சியில் இருந்து விலக்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (06)

வருகின்றது. 25

## ஆசியப்—

தொடர்பாக பி. பி ஸி கொழும்புச் செய்தியாளர் கிறிஸ்மொறிஸ்டாக்டர் ஆர்தர் சி. கிளார்க்கைப் பேட்டி கண்ட போது வெளியான தகவல்கள்,

தத்தம்சொந்தக் கருத்துக்களை மாத்திரமே தணிக்கை அடிப்படையில் ஒளிபரப்புச் செய்ய முனையும் முயற்சி இனியும் பலிக்காது,

இதற்கேற்றாற் போல் பி. பி. ஸி புதிய செய்மதிக் கோள் தொலைக்காட்சிச் சேவை ஒன்றினை கடந்த அக்டோபர் 15ஆம் திகதி முதல் ஆசியாவுக்கென அறிமுகம் செய்துள்ளது.

ஆசியாவிலுள்ள தொலைக்காட்சி ஒளிபரப்புகள்யாவும் அவ்வவ் நாடுகளின் கட்டுப்பாட்டிலேயே தத்தம் கருத்துக்கேற்ப நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

ஸ்ரீலங்காவிலும் அரசு சார்புச் செய்திகளை மாத்திரமே அரசுக்குச் சாதகமானவகையில் ஒளிபரப்புச் செய்யப்பட்டுவருகிறது என்ற பரவலான குற்றச்சாட்டு இருந்து வருவதும் இங்கு சுட்டிக் காட்டப்படுகின்றது.

சேர்ந்த பாடசாலைகளுக்கு

## 100 ஏக்கர்...

கிராமங்களைச் சேர்ந்த முந்நூறு குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன.

ஆயிரம் ஏக்கர் காணியில் விவசாயம் செய்தவர்களும் இவர்களில் அடங்குவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## யாழ்ப்பாணத்தில்...

இதன்படி இவர் கூறிய பழைய வீட்டிற்கு உறவினர்கள் சென்றபோது சிறுமி கூறிய வீட்டின் அமைப்பும், இறந்தசிப்பாயின் பெற்றோரும் காணப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மறுபிறப்பு எடுத்த அந்த மூன்று வயது சிறுமி அங்கு தனது பழைய சகோதரர்களை பெயர் கூப்பிட்டு அழைத்து அவர்களின் பிறந்த திகதியையும் சரியாக குறிப்பிட்டாள்.

தனது பழைய நண்பர்களையும் பெயர் கூறி அழைத்து பழைய சம்பவங்களையும் நினைவு கூர்கின்றாள். என்றும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது இச்சிறுமியின் புகைப்படத்தை ஐலண்ட் பத்திரிகை வெளியிட்டுள்ளது.

களைச் சேர்ந்த பாடசாலைகளுக்கு சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியிலும் இன்று முதல் நான்கு நாள்களுக்கு இந்தப் பயிற்சி நெறி நடைபெறவுள்ளது. (18)

## சாகரவாஹினியும்...

இல்லை.

நான் அமைச்சராக இருந்த போது மூன்று கப்பல்கள் கொள்வனவு செய்ய ஒப்பந்தம் செய்யப்பட்டது ஆனால் இரு கப்பல்களே வந்து சேர்ந்தன. மூன்றாவது கப்பல் வரவில்லை அது குறித்து அமைச்சரவைக்கே தெரியும் அதற்கு நான் காரணம் அல்ல இவ்வாறு அவர் கூறினார்.

## புலிகள்...

கூறுகிறது.

"தீவுப் பகுதிகளையும்தாங்கள் கைப்பற்றியுள்ளதாக இராணுவம் கூறுகிறது. இது பெரிய விடயமல்ல. விடுதலைப் புலிகள் அதிக அளவில் அங்கு நிலை கொண்டு இருக்கவில்லை. இருப்பினும் யாழ் நகரைப் பிடிப்பதென்பதும் சுலபமானதல்ல" என்று மேலும் அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.